# செய்தி வெளியீடு

**நாள் 23.08.2018**

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வலைப் பக்கம் (Web Portal) மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் (ICT Application in Sports Domain) குறித்தான பயன்பாடுகள் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு பா. பாலகிருஷ்ணா ரெட்டி இன்று (23.08.2018) ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் துவக்கி வைத்தார்கள்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் இன்று (23.08.2018) ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் ரூ.41.60 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ள www.sdat.tn.gov.in என்ற இணையதளம் மற்றும் தகவல் தொடர்பு பயன்பாடு சேவைகளை (Web portal and ICT Application in Sports Domain) துவக்கி வைத்தார். இதுகுறித்த கையேட்டினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் வெளியிட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு தீரஜ் குமார், இ.ஆ.ப. அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை மற்றும் திட்ட விளக்கவுரையாற்றினார்கள்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு தீரஜ் குமார், இ.ஆ.ப. அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமை வகித்து பேசுகையில், இதய தெய்வம் மறைந்த தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் வந்த மாண்மிகு தமிழகத்தின் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு தமிழகத்தின் துணை முதலமைச்சர் அண்ணன் பன்னீர்செல்வம் அவர்களும் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கனவை நனவாக்கும் வகையில் தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறைக்கு பல்வேறு திட்டங்களை வகுத்து

செயல்படுத்தி வருகிறார்கள். பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு ஏதுவாக தமிழகத்திலுள்ள வீரர், வீராங்கனைகளை கண்டறிந்து அவர்களுக்கு அனைத்து விதமான பயிற்சிகளை அளித்து ஊக்கப்படுத்தி வருகிறது. இதற்கு அதிக அளவில் அரசின் சார்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பல்வேறு விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்திட அரசின் சார்பில் நிதியுதவி செய்யப்பட்டு வருகிறது. சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற உலக ஜுனியர் ஸ்குவாஷ் விளையாட்டுப் போட்டிகளை நடத்திட 50 இலட்சம் ரூபாய் அரசு நிதியுதவி செய்தது. சென்னை மட்டுமின்றி தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள விளையாட்டு அரங்கங்கள் அனைத்து விதமான விளையாட்டுப் பயிற்சிகளும் மேற்கொள்ளும் வகையில் கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

கிராம அளவிலும் உள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளை கண்டறிந்து அவர்களுக்கு பயிற்சி அளித்து பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க ஏதுவாக அரசு செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களை அடையாளம் காணவும், ஊக்குவிக்கவும் அவர்களின் தரவரிசை மற்றும் திறமையினை உண்மை நேர (Real Time basis) அடிப்படையில் கண்காணிக்கவும் தமிழ்நாட்டிற்கு மேலும் ஒரு வரப்பிரசாதமாக விளையாட்டு வீரர்களுக்கான மென்பொருள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வருவாய் நிதியிலிருந்து ரூ.41.60 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வாயிலாக தமிழ்நாட்டில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள், திட்டங்கள், கட்டமைப்பு வசதிகள், விளையாட்டு விடுதிகள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கிய மென்பொருள் தேசிய தகவலியல் மையம் மூலம் கீழ்க்கண்ட தகவல் மற்றும் சேவைகளை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கு ஏதுவாகவும் விளையாட்டு வீரர்கள் பயன்பாட்டிற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு வீரர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் திட்டங்கள் தொடர்பான விவரங்களை அறிந்து கொள்ளவும் மற்றும் இணைய தளம் மூலம் போட்டிகளில் பங்கேற்க பதிவு செய்யும் வசதி உருவாக்கப்பட்டுள்ளது. பெற்றோர்கள் தங்கள் இல்லத்தில் இருந்தபடியே விளையாட்டு விடுதிகளில் தங்களது குழந்தைகளை சேர்ப்பிப்பதற்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம். தேர்வு செய்யப்பட்டவர்களுக்கான விவரங்கள் அவரவர் கைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலம் தெரிந்து கொள்ளலாம். விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்பட்ட வீரர்களின் அனைத்து தகவல்களையும் விளையாட்டு விடுதி மேலாளர்கள் மூலம் பதிவேற்றம் செய்து, மாணவ, மாணவிகளின் செயல்பாடுகள் உண்மை நேர அடிப்படையில்

கண்காணிக்கப்படும். விளையாட்டு அரங்கங்கள் மற்றும் உறுப்பினர் சேர்க்கை (Swimming Membership at Aquatic Complex) இணையதளம் வாயிலாக முன்பதிவு செய்யும் வசதி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்து தரவுகள் மேலாண்மை செய்யப்படும். தமிழக விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் இயங்கும் அனைத்து விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் தொடர்பான தரவுகள் மேலாண்மை (Database Management) செய்யப்படும். பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் சந்தேகங்களை இணையம் வாயிலாக தெரிவிக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாநில தகவலியல் அலுவலர் திரு சீனிவாச ராகவன், தேசிய தகவல் மைய முதுநிலை தொழில்நுட்ப இயக்குநர் முனைவர் எம். பாலசுப்ரமணியன் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். தேசிய தகவல் மையத்தைச் சேர்ந்த திருமதி டி. ஸ்ரீபிரியா செயலியைக் குறித்து நேரடி விளக்கம் அளித்தார்கள். நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உயர் அலுவலர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் விளையாட்டு விடுதி மாணவர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைப் பொது மேலாளர் திருமதி ரெ. கீதாஞ்சலி ரத்தினமாலா நன்றியுரை கூறினார்கள்.

**வெளியீடு**
மக்கள் தொடர்பு அலுவலர்,
தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு
ஆணையம், சென்னை–84.